**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 248/2021**

**வா.சா.1 – பாலகிருஷ்ணன்**

**<u>12-02-2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

14. சுதாவிற்கும் எனக்கு ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு என்ன பிரச்சினை ஏற்ப்பட்டது என்றால் தடத்தை குறுக்காட்டியதால் பிரச்சினை ஏற்ப்பட்டது. பிரச்சினைக்கு பின்னிட்டு தான் மூன்று வருடம் கழித்து ஒப்பந்தம் போட்டோம். தடப்பிரச்சினை என்ன முடிவானது என்றால் எந்த முடிவும் ஏற்ப்படவில்லை. தடப்பிரச்சினையை மனதில் வைத்துக்கொண்டு பதிவுசெய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு பிரதிவாதிக்கு மன உளைச்சல் ஏற்ப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மூன்று முறை சமரசத்திற்காக நீதிமன்றத்ததால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மூன்று முறையும் சமரசமைத்தில் நான் முன்னிலையானேன்.

15. சுதா இருமுறை முன்னிலையானார். சுதாதான் சமரசத்திற்கு உடன்படவில்லை. சுதா சமரசத்திற்கு முன்வந்தார் என்றும், நான் தான் முன்வரவில்லை என்றால் சரியல்ல. சுதா சமாதானத்திற்கு எப்போதும் தயாராகதான் இருந்தார் என்றார் சரியல்ல, வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பணத்தை நான் கொடுக்காததால் சுதா என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் சமாதானத்திற்கு நீதிமன்றத்தால் முயற்சிசெய்யப்பட்டு சமாதானமாகவில்லை என்றால் சரியல்ல. இருதியாக நான் ஒர் ஆண்டு காலம் அவகாசம் கேட்டேன் என்றால் சரியல்ல, 90 நாட்கள் கேட்டேன்.

16. நான் சுதாவிற்கு பணம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு காவல் நிலையத்தில் வைத்து கொலைமிரட்டல் கொடுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதற்கான ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு உண்மையில் நடந்து இருந்தால் காவல் உயர் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்து அவர்களையும் தரப்பினர்களாக சேர்த்து இருப்பேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.12 15:03:32 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.